**தலைப்பு 120 – மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஆம் ஆண்டு**

---

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்த) சட்டத்தினால் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் முதலாவது அட்டவணையிலும் மூன்றாவது அட்டவணையிலும் குறிப்பிடப்பட்ட தலைப்புக்கள் மற்றும் விடய இலக்கம் என்பவற்றின் கீழ்வரும் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சினால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டன. அக்கணக்குகளிலிருந்தும் இணக்கக் கூற்றுக்களில் நிரூபணமாகும் நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

## 1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்குகள் தொடர்பான பொறுப்பு

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 124 பிரமாணத்தின் பிரகாரம் அரசின் பண உழைப்பு மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய பணத்தை சேகரித்தல் உட்பட அரசின் சகல நிதி நடவடிக்கைகளையும் மேற்பார்வை தொடர்பாக பொது அதிகாரம் நிதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரால் அப்பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு நிதிப்பிரமாணம் 124(2) பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். நிதிப்பிரமாணம் 125(1)(அ) பிரகாரம் திணைக்களத் தலைவர் தனது திணைக்களத்தின் சகல பணக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராக இருப்பதுடன் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் திறைசேரியால் நியமிக்கப்பட்டுள்ளார். பாராளுமன்றத்தில் விதிக்கப்படும் வரையரைகளுக்குள்ளே தமது கடமைகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.3 கணக்காய்வு விடயப் பரப்பு

---

தலைப்பு 120 – மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பாக திட்டமிடல், அரச செலவினங்கள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல் மற்றும் புத்தகங்கள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை நாளதுவரையாக பேணுதல், கணக்குகளைத் தயாரித்து உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்தல், செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு தரப்பினருக்கு இடையே செயலாற்றல் அறிக்கைகளை விநியோகித்தல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2018 ஒக்தோபர் 05 ஆந் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள், கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் மேற்படி 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் விரிவாக காண்பிக்கப்பட்டுள்ளன. அந்த அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தி முதல் 2.9 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி நிர்வாகத்தின் போதுமானதன்மை உறுதிப்படுத்தப்படும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 127 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளை நிறைவேற்றும் போது கண்டறியப்பட்ட பின்வரும் குறிப்பில் பொழிப்பாக்கப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு உட்படத் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களிதன்மையை திருப்திகரமாக நிறைவேற்றியுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

| **நிதிப்பிரமாணம் 127 இன் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்களிதன்மை** | | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினாலும் அதன் ஏற்பாடுகளுடன் இணங்காதிருந்தமை** | **அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையின் பந்தியுடனான தொடர்பு** |
|---|---|---|---|
| 127(1)(அ) | சரியான மற்றும் நிதி முறையாக செய்யப்படுவதாக உறுதிப்படுத்தப்படும் வகையில் சகல நிதிச் செயற்பாடுகளும் திட்டமிடப்பட வேண்டும். | 1. செயல் நடவடிக்கைத் திட்டம் சரியாக தயாரிக்கப்பட்டிருக்கவில்லை | 2.2.1 |
| | | 2. பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை | 2.5 |
| 127(1)(ஆ) | செலவினம் மற்றும் அரச வருமான சேகரிப்பு தொடர்பாக போதியளவு கட்டுப்பாட்டிற்கும் ஏற்பாடுகள் தயாரிக்கும் முறையொன்று தயாரித்துக் கொள்ளப்பட்டுள்ளதாகவும் வேண்டும். | 1. இணக்கமின்மைகள் | 2.6 |
| | | 2. மனித வள முகாமைத்துவம் | 2.9 |
| 127(2) | தமது நிர்வாகத்தின் கீழ் காணப்படும் திணைக்களங்களில் அப்போது இருக்கும் செலவின விடயங்கள் உட்பட புதிதாக அல்லது கூடுதலாக செலவு செய்வதற்கான முன்மொழிவுகள் சிக்கனமாகவும் செயற்திறனான வகையில் அமைச்சில் நுண் பரிசீலனைக்கு உட்படுத்தல் | 1. எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகளை பெற்றுக் கொள்ளாமை | 2.1(அ) |
| | | 2. பிரதான செயற்பாடுகள் போதியளவில் நிறைவேற்றப்படாமை | 2.1(ஆ) |
| | | 3. பெறுகை செயற்பாடுகளை செயற்படுத்தல் | 2.2.2 |
| | | 4. சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல் | 2.4 |

| | | | |
|---|---|---|---|
| 127(3) | ஐயத்திற்குரிய அல்லது சிக்கலான விடயங்கள் அனைத்தையும் தமது சொந்த நிர்வாக அனுபவத்தையும் தீர்மானத்தையும் அதில் பிரயோகிப்பதற்காக அவருக்கு வழங்கப்படுகின்றதெனவும் | சொத்துக்கள் முகாமைத்துவம் | 2.3 |
| 127(5) | அமைச்சின் மதிப்பீடுகளில் நிதிஏற்பாடு மற்றும் செலவினத்திற்கு இடையே உள்ள கருத்திற் கொள்ளக் கூடியளவு வேறுபாடு அமைச்சினால் அழுத்தமாக புலனாய்விற்கு உட்படுத்தப்பட்டதாகவும் | 1. திணைக்களத்தால் வழங்கப்பட்ட ஏற்பாடுகளை குறைவாகப் பயன்படுத்தல் | 2.7(ஆ) |
| | | 2. மிகை நிதி ஏற்பாடு | 2.7(அ) |
| 127(7) | உத்தியோகத்தர்கள் / ஊழியர்களின் தாமதம், கவனயீனம், தவறுகள் அல்லது மோசடியால் அரசிற்கு நட்டம் ஏற்பட்ட சந்தர்ப்பங்களில் நிதிப் பிரமாணம் 103 முதல் 108 வரையான பிரமாணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளை கணக்கீட்டு உத்தியோகத்தர்களினால் கடைப்பிடிக்கப்பட்டதாகவும், நிதிப்பிரமாணம் 156(1) இன் பிரகாரம் அந் நட்டங்கள் தொட்பாக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள் /ஊழியர்கள் பேரில் மிகை கட்டணங்களை விதிப்பதனை கண்காணிக்கும் பொருட்டு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டதால் தமக்கு கையளிக்கப்பட்டுள்ள பொறுப்புக்களிலிருந்து கணக்கீட்டு உத்தியோகத்தர் விடுவிக்கப்பட்டதாக கருதப்படும். அரசாங்க கணக்கு குழுவின் முன் தோன்றுவதற்கும் தாம் பொறுப்பு வகிக்கும் திணைக்களங்களின் கணக்குகளை தெளிவுபடுத்துவதற்கும் நியாயப்படுத்துவதற்கும் கணக்கீட்டு உத்தியோகத்தர்களுடன் ஒத்துழைத்தலும் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கடமைப் பொறுப்பாகும். | நிதி முறைகேட்டுத் தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள் | 2.8 |

## 2 போதியளவு மற்றும் முக்கியமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 2.1 செயலாற்றல்

**பிரதான நோக்கங்களை நிறைவேற்றாமை**

**(அ) பிரதான நோக்கங்களை அடைந்து கொள்ளாமை**

சிறுவர் மற்றும் மகளிர் உரிமைகளை பாதுகாப்பதற்காக நல்லாளுகையை உபயோகிப்பதன் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளவாறு குறிப்பிட்ட தேவைகளை வழங்குதல் மற்றும் கொள்கைகளைத் தயாரித்தல், செயற்படுத்தல் மற்றும் ஒழுங்குபடுத்தல் என்பன அமைச்சின் பணியாகக் காணப்பட்ட போதிலும், சிறுவர் மற்றும் மகளிர் உரிமைகளை உறுதிப்படுத்தல், பாதுகாத்தல், மேம்படுத்துவதற்காக ஏற்பாடு செய்திருந்த சட்டங்கள் மற்றும் தயாரிக்கப்பட்ட கொள்கைகளுக்கு அதிகாரமளித்து செயற்படுத்துதல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) போதியளவில் நிறைவேற்றப்படாத முக்கிய கருமங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 10,000 முன்பள்ளி ஆசிரியைகளுக்கு மாதாந்தம் ரூபா 250 வீதம் படியொன்று செலுத்துவதற்காக ரூபா 30 மில்லியன் நிதிஏற்பாடு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டு இறுதி வரை படி செலுத்தப்பட வேண்டிய ஆசிரியைகளை இனங்காண முடியாமையினால் 5,636 முன்பள்ளி ஆசிரியைகளுக்கு மாத்திரம் ரூபா 16.50 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது.

(ii) உதவியற்ற நிலைமைக்கு உள்ளான மகளிர் மற்றும் சிறுவர்களுக்காக நலன்புரி மற்றும் புனர்வாழ்வு நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல் நடத்துதல் மற்றும் அடைக்கலம் வழங்குதல் என்பன அமைச்சின் முக்கிய கருமங்களாக இருந்த போதிலும், பெண்களுக்கு எதிரான துஷ்பிரயோக்ஙகள் தொடர்பில் 2017 ஆம் ஆண்டில் 1938 தொலைபேசி மூலமும் அமைச்சிலுள்ள பெண்கள் குழுவிலுள்ள முறைப்பாட்டு நிலையத்திலும் 1514 வகையான சம்பவங்கள் வெளிப்பட்டிருந்தது. தீர்க்கப்பட்ட தொகையில், தரவுத்தளம் தயாரிக்கப்பட்டிருக்காததுடன் பின்தொடர் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. பத்திரிகைகளால் வெளிப்படுத்தப்பட்ட பெண்கள் மற்றும் மாணவர்களால் எதிர்கொள்ளப்பட்ட பெண்கள் சிறுவர் துஷ்பிரயோகத்திற்கு எதிரான சம்பவங்களின் எண்ணிக்கை 2016 இல் 2,456 ஆக இருந்ததுடன் 2017 இல் இதன் எண்ணிக்கை 3,046 ஆகவிருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது இது 24 சதவீதத்தால் அதிகரித்தது என அவதானிக்கப்பட்டது.

(iii) 2017 மே இல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சிறுவர் மற்றும் பெண்களிற்கு அரச சார்பற்ற அமைப்புக்கள், தனியார் நிறுவனங்கள் மற்றும் பல்வேறுபட்ட நிறுவனங்கள் பொருட்கள் உதவியை வழங்கியிருந்ததுடன், இந்த பொருட்களில் பல பொருட்கள் விநியோகிக்கப்பட்டிருக்கவில்லையென 2017 ஆகஸ்ட் 21 இல் மேற்கொள்ளப்பட்ட பௌதீகப் பரீட்சிப்பில் வெளிப்பட்டிருந்தது.

(iv) 2017 யூன் 27 இன் 540/டீ/டீஈவி/09/டீஎஸ்சீ கடிதத்தின் பிரகாரம் அரச பாதுகாப்பு அமைச்சானது வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு 6000 அப்பியாசப் புத்தகங்களை வழங்கியிருந்ததுடன் அதில் 98 புத்தகங்கள் மாத்திரம் 28 மாணவர்களிற்காக வழங்கப்பட்டிருந்ததுடன் மிகுதி 5,902 புத்தகங்கள் 2017 ஒக்தோபர் 16 இல் புத்தகங்கள் சிறுவர் இல்லங்களிலுள்ள முன்பள்ளி வயதுள்ள சிறுவர்களிற்காக வழங்குவதற்காக நன்னடத்தை திணைக்களத்திற்கு கையளித்திருந்தது.

(v) வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சிறுவர் மற்றும் பெண்களிற்காக உடனடி மீட்சி பொதிகளின் வழங்கல்களிற்காக குறைநிரப்பு ஏற்பாட்டிலிருந்து ஏற்பாடுகள் வேண்டப்பட்டிருந்தது. அதில் ரூபா 11 மில்லியன் தொகை மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு சேமிக்கப்பட்டிருந்தது.

(vi) வெளிநாட்டிற்கு செல்ல விருப்பமுள்ள பெண்களிற்காக மாற்று வருமானம் உழைக்கும் நிகழ்ச்சித்திட்டத்திற்காக ரூபா 3.5 மில்லியன் தொகையான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் 140 செயற்திட்டங்கள், திட்டமிடப்பட்டிருந்ததுடன் அமைச்சால் சமர்ப்பிக்கப்பட்ட செயன்முன்னேற்ற அறிக்கைகளின் பிரகாரம், ரூபா 3.497 மில்லியன் தொகையான ஏற்பாடுகள் 140 நலனாளிகளிற்காக மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் 108 நலனாளிகளிற்காக மாத்திரம் ரூபா 2.73 மில்லியன் மாத்திரம் வழங்கப்பட்டிருந்ததுடன் அதில் 09 செயற்திட்டங்கள் கணக்காய்வால் வழங்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் தவறியிருந்தது.

(vii) தோட்டப் பெண்களின் பொருளாதார வலுவூட்டல் நோக்கத்திற்காக தையல், உணவு உற்பத்தி, பண்ணை, ஆடு வளர்ப்பு, தேன் பேணல் மற்றும் அழகுக்கலாச்சாரம் போன்ற நிகழ்ச்சித்திட்டங்களிற்காக மீளாய்வாண்டின் போது 307 பயனாளிகளிற்காக மாவட்ட செயலகங்களிற்கு ரூபா 2.13 மில்லியன் ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. முட்டைகள், மிருக விதைகள் மற்றும் கருவிகள் பெற்ற நலனாளிகளின் கையொப்பத்தை உள்ளடக்கிய எழுத்துமூல சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. பெண்களை வலுவூட்டல் மற்றும் வணிகத்தை அவர்களுடைய பிரதான நோக்கங்களை அடைதலிற்கான நடாத்தும் போது எதிர்கொள்ளும் பிரச்சினைகள் போன்றன பின்தொடர் நடவடிக்கைகள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(viii) மீளாய்வாண்டின்போது பொருளாதார வலுவூட்டலை முன்னேற்றல் மற்றும் நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்காக பெண்கள் பங்களித்தல் போன்ற நோக்கங்களிற்காக ‘‘திறகுற கிருசி’’ செயற்திட்டத்திற்காக ரூபா 2.2 மில்லியன் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. வெற்றிலை, மிளகு, கறுவா, றோசாப்பூ போன்றவற்றின் பயிர்ச்செய்கை மற்றும் மருந்துகளின் செயற்திட்டம் போன்றவற்றிற்காக பிரதேச செயலகங்களிற்கு ரூபா 2.174 மில்லியன் தொகையொன்று வழங்கப்பட்டிருந்தது. விவசாய செயற்திட்டங்களிற்காக 382 நலனாளிகளுக்கு நன்மைகள் வழங்கப்பட்டிருந்த போதிலும், 20 விவசாய செயற்திட்டங்களிற்காக நலன்கள் வழங்கப்பட்டிருந்தது. செயன்முன்னேற்ற அறிக்கைகளின் பிரகாரம், நலனாளிகளிற்காக தாவரங்களை பெறுதல், தாவரங்களின் தகைமை கிடைக்காமை, பயிற்சிகளை நடாத்துவது தொடர்பில் உரிய தகவல் கிடைக்காமை, செயற்திட்டத்தின் செயன்முன்னேற்றம் மற்றும் பணத்தை அறவிடுதலின் பின்தொடர் நடவடிக்கை எடுத்தல், மற்றும் சரியாக பதிவு முறையை எடுத்தல் போன்றவற்றிற்கான கணக்காய்வுச் சான்றுகள் போதியற்றதாகவிருந்ததென அவதானிக்கப்பட்டது.

(iv) 2017 இல் பெண்களின் பொருளாதார மற்றும் சமூக வலுவூட்டலிற்காக கருமபு உற்பத்தி, காளான் உற்பத்தி, நுளம்பு வலைகளை தைத்தல், காலுறை உற்பத்தி போன்ற 19 செயற்திட்டங்களிற்காக பிரதேச செயலகங்களினூடாக 343 நலனாளிகளிற்காக ரூபா 4.86 மில்லியன் தொகையான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இருந்த போதிலும், நான்காவது காலாண்டின் செயன்முன்னேற்ற அறிக்கைகளின் பிரகாரம், 20 செயற்திட்டங்களின் கீழ் 576 நலனாளிகளிற்காக ரூபா 4.97 மில்லியன் செலவழிக்கப்பட்டிருந்தது என குறிப்பிடப்பட்டது. பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் பங்குபற்றுவோர்களின் கையெழுத்து தாள்களின் மற்றும் நலனாளிகளுக்கு இயந்திரங்கள் மற்றும் கருவிகளை கையளித்தலிற்கான எழுத்துமூல சான்றிதழ்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அவர்களுக்கு வழங்கப்பட்ட ஏற்பாடுகளில் 50 சதவீதம் தவணைக் கட்டண அடிப்படையில் அறவிடப்பட வேண்டிய போதும், மேற்கூறப்பட்டவற்றின் விபரங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்காததுடன் ஒவ்வொரு 03 மாதங்களிற்கு ஒரு தடவையிலும் செயற்திட்டத்தின் செயன்முன்னேற்றம் மற்றம் பின்தொடர் நடவடிக்கைகளை எடுத்தல் பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தரால் மற்றும் நிவாரண தொகுப்பு அமைச்சிற்கு அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை.

(x) சிறுவர்களின் உரிமைகளை உறுதிப்படுத்தி பாதுகாக்கும் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்காக ரூபா 4.3 மில்லியன் தொகையான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதும், 2017 ஏப்ரல் இல் கட்டுநிதியாக திறைசேரியிடமிருந்து ரூபா 3 மில்லியன் தொகை வழங்கப்பட்டிருந்தது. 2017 ஆம் ஆண்டிற்காக செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்காமையால், மேற்கூறப்பட்ட ஏற்பாடுகளை செலவழித்தல் யூலை மாதத்திலிருந்து ஆரம்பித்திருந்ததுடன் 2017 திசெம்பர் 31 அளவிலும் அதனை செலவழிக்காமல் ரூபா 1.1 மில்லியன் தொகை திறைசேரிக்கு திருப்பப்பட்டது.

## 2.2 பெறுகை செய்முறையினூடாக வழங்கல்கள் மற்றும் சேவைகளை பெறுகை செய்தல்

### 2.2.1 பெறுகை மற்றும் ஆரம்ப கட்டத்தை திட்டமிடல்

அரச பெறுகை வழிகாட்டிக்கோவையின் 4.2.2(அ),(ஆ) ஆம் பந்தியின் பிரகாரம் கொள்வனவு உருப்படிகளின் காலப்பகுதியின் பிரகாரம் பெறுகை நேர அட்டவணையானது விரிவாக தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 பெறுகை செய்முறையை அமுல்படுத்தல்

(அ) ஆரம்ப பிள்ளைப் பருவ அபிவிருத்தி உத்தியோகத்தர்களிற்காக ரூபா 6.7 மில்லியன் பெறுமதியிலான அலுமாரிகளை பெறுகையில் விலைமனு ஆவணங்களை தயாரித்தல், மதிப்பீட்டு மற்றும் அங்கீகரித்து தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவிற்கு அனுப்புதல் போன்றன வழிகாட்டி 2.6.1 அ(ii) இன் பிரகாரம் பெறுகை வழிகாட்டிக் கோவையின் 6.3.1 ஆம் பிரிவின் பிரகாரம் பின்பற்றப்பட்டிருக்காததுடன் பதியப்பட்ட விலைமனுக்களின் வேண்டுதல்களை உறுதி செய்வதற்கும் விலைமனு அழைப்பு கையளித்தல் மற்றும் விலைமனுவை திறத்தல் போன்றவற்றை சரிசெய்வதற்கான சான்றானது பெறுகை வழிகாட்டியின் 6.3.2 ஆம் வழிகாட்டிக்கு முரணாக மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) ஆரம்ப பிள்ளைப் பருவ அபிவிருத்தி வாரத்துடன் தொடர்புடைய ரூபா 1.17 மில்லியன் பெறுகையானது பெறுகைத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. பெறுகை வழிகாட்டியின் 6.3.4 ஆம் வழிகாட்டியின் பிரகாரம், விலைமனுவை கோரும்போது பொருட்களின் விபரங்கள் உள்ளடக்கப்பட்டிருக்காததுடன், விலைமனுவை திறப்பதற்காக

பயன்படுத்தப்படாத வேண்டப்பட்ட விதப்புரைகள் தெளிவான விளக்கங்களின்மையால் பெறுகை வழிகாட்டி கோவையின் 6.3.3 வழிகாட்டிக்கு முரணாக பிற்போடப்பட்டது.

(இ) திறந்த பொருளாதாரத்தின் 40 வது வருடாந்த விழாவின் கண்காட்சி மீளாய்வாண்டின்போது 27 யூலையிலிருந்து 30 நாட்கள் வரை 4 நாட்கள் நடைபெற்றது. அதற்காக கண்காட்சி மண்டபங்களை தயாரிப்பதற்கு ஒரு நிறுவனமொன்றை தெரிவு செய்வதற்கு விலைமனு ஒன்று கோரப்பட்டது. ஆகக்குறைந்த மதிப்பிடப்பட்ட விலைமனுதாரர் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன் பெறுகைச் செய்முறையிலுள்ள குறைபாடுகளால் ரூபா 2.19 மில்லியன் ஒப்பந்த பெறுமதியில் 2017 யூலை 26 இல் கையளிக்கப்பட்டிருந்தது. கண்காட்சி மண்டபம் 2018 யூலை 27 அளவில் அமைச்சிற்கு கையளிக்கப்பட்டிருக்க வேண்டுமென அவர்கள் அறிவித்திருந்த போதிலும், அவர்கள் 2017 யூலை 28 இல் கண்காட்சி தினத்தில் கண்காட்சி மண்டபத்திற்கு கையளித்திருந்தனர்.

(ஈ) இலத்திரனியல் சாதனம், தளபாடம் மற்றும் உபகரணத்தை பொருத்துவதற்காக கிரய மதிப்பீடுகளை அங்கீகரிக்காமல் ரூபா 7.7 மில்லியன் தொகை செலவழிக்கப்பட்டிருந்தது. விலைமனு ஆவணங்களை வரைபு செய்தல், மதிப்பிடல் மற்றும் அங்கீகரித்தல் தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3 சொத்துக்கள்முகாமைத்துவம்**

**(அ) வாகனங்களை தவறாக பயன்படுத்தல்**

கௌரவமிக்க சிறுவர்கள் அலுவல்கள் அமைச்சருக்கு ஒதுக்கப்பட்ட ஜீப் ஒன்று 2015 ஆம் ஆண்டில் விபத்தொன்றை ஏற்படுத்தியிருந்தது. மேற்கூறப்பட்ட விபத்து தொடர்பாக பொலிஸ் தலைமையதிபதியால் (மத்திய மாகாணம்) 2016 பெப்ரவரி 19 இன் எஸ்/டீஐஜீ/சீபி/சீ/417/2015 ஆம் இலக்க கடிதம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அந்த அறிக்கையின் பிரகாரம், 2015 மார்ச் 10 ஆந் திகதி நடைபெற்ற அந்த விபத்தில் வேறொரு பாராளுமன்ற உறுப்பினரின் தனிப்பட்ட சாரதியொருவர் காரை ஓட்டியிருந்தார். அமைச்சானது வேறொரு பாராளுமன்ற உறுப்பினரால் பயன்படுத்தப்பட்ட அமைச்சருக்கு ஒதுக்கப்பட்ட மேற்கூறப்பட்ட வாகனம் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லையெனவும் இருந்தது.

**(ஆ) வெளித்தரப்பினர்களுக்கு கொடுக்கப்பட்ட சொத்துக்கள்**

அமைச்சின் 17 வாகனங்கள் முறையற்ற ரீதியில் வெளித்தரப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது.

**(இ) மாற்றப்படாத சொத்துக்களின் முறையற்ற பாவனை தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) வியஹம பிரதேச செயலகத்திற்கு சொந்தமான காணியை மாற்றாமல் 2001 இல் பெண்கள் விடுதியை கட்டியெழுப்புவதற்கு ரூபா 25 மில்லியன் தொகை ஏற்பட்டிருந்ததுடன் காணியானது 2018 யூலை 25 ஆன கணக்காய்வு திகதி வரை மாற்றப்பட்டிருக்கவில்லை.

(ii) ஏனைய அமைச்சுக்களிடமிருந்து 13 வாகனங்களை மாற்றுவதற்கு அமைச்சானது பொருத்தமான நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை.

**2.4 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இங்கிறியாவிலுள்ள பிரதேச செயலகத்திற்கு ரூபா 1.53 மில்லியன் ஏற்பாடுகள் 2016 இல் மாற்றப்பட்டிருந்ததுடன் இற்காக ரூபா 608,438 தொகை செலவழிக்கப்பட்டிருந்ததுடன் பயிற்சி நிகழச்சித்திட்டத்திற்காக ரூபா 12,000 தொகை வெளிப்படுத்தப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டத்திற்கான செலவீனமானது முறைமையானது திட்டமிடலில்லாமல் தொடங்கியமையால் சிக்கனமற்றதாகவிருந்ததுடன் செயற்திட்டமானது வெற்றிகரமற்றதாகவிருந்தது என அவதானிக்கப்பட்டது.

(ஆ) ''டிறிய கன்தா'' செலவின விடயத்தின் கீழான ரூபா 10 மில்லியன் ஏற்பாடுகள் மற்றும் ''கந்தா சாவியா'' விடயத்தின் கீழான ரூபா 1.00 மில்லியன் ஏற்பாடுகள் போன்றன சர்வதேச பெண்கள் தினம் தொடர்பான தேசிய விழாவை கொண்டாடுவதற்காக மேற்கொள்ளப்பட்டிருந்தது. ஏற்பாடுகள் செலவழிக்கப்படாத முறையானது செலவினத்திட்டமொன்றிற்காக தயாரிக்கப்பட்டிருக்காததுடன் ஏற்பாடுகளானது அரங்கு, ஒலிபெருக்கிகள் மற்றும் ஊடக வடிவமைப்பிற்காகவும் உணவு மற்றும் பானங்களிற்காக பிரதேச செயலகத்திற்காக செலவழிக்கப்பட்டிருந்ததுடன் அத்தகைய ஏற்பாடுகள் அல்லது திரைப்படங்கள் நிலைபெறுதகு தந்திரோபாங்களை அறிமுகப்படுத்துவது தொடர்பாகவும் செலவழிக்கப்பட்டிருக்க முடியாதென்பதுடன் பெண்களால் எதிர்கொள்ளப்பட்ட தீவிர சமூக மற்றும் பொருளாதார சர்ச்சைகளிற்காக அவற்றை அமுல்படுத்துவதற்காகவும் செலவழிக்கப்பட்டிருந்தது.

(இ) ஆரம்ப பிள்ளைப் பருவ பராமரிப்பு மற்றும் அபிவிருத்தி மீதான தேசிய வாரத்திற்குரியதாக பின்வரும் நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டிருந்தது. அதற்காக ரூபா 9 மில்லியன் தொகை செலவழிக்கப்பட்டிருந்தது. சிறுவர்களால் எதிர்கொள்ளப்பட்ட தீவிர மற்றும் பொருளாதார சர்ச்சைகளின் மீட்சிக்காக செலவழிப்பதற்கு சாதகத்தன்மை இருந்த போதும் (i) கொள்கையை தயாரித்தல் நிகழ்ச்சித்திட்டம் (ii) முன்பள்ளி மாணவர்கள், முன்பள்ளி ஆசிரியர்கள், களத்தில் ஈடுபட்டுள்ள அலுவலர்கள், கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் இளைஞர் குழுக்களிற்கான கவனயீர்ப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் (iii) முன்பள்ளி மாணவர்களின் அழகுக்கலை சார்ந்த நிகழ்ச்சித்திட்டங்கள் (iv) மாதிரி கிராமத்திலுள்ள சுறுசுறுப்பான குழுவிற்கான கவனயீர்ப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் (v) 1000 பதாதைகள் மற்றும் அப்பியாசப் புத்தகங்களை கொள்வனவு செய்தமை (iv) தொடர்ச்சியாக இந்த வாரம் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்காக பிரதேச செயலகங்களிற்காக ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தமை போன்றவற்றை உள்ளடக்கி மீளாய்வாண்டின் போது இந்த வாரம் ரூபா 9 மில்லியன் தொகை செலவழிக்கப்பட்டிருந்தது.

**2.5 பதிவேடுகள் மற்றும் புத்தகங்களைப் பேணாமை**

------------------------------------------------------------------------------------

அமைச்சானது அரச பெறுகை வழிகாட்டியின் 2.11.2, 2.11.(3)(அ) மற்றும் 5.2.1 ஆம் வழிகாட்டியின் பிரகாரம் வருகை பதிவேடுகள், குழுக்கூட்டங்களின் அறிக்கைகள் விலைமனு அழைப்பிற்காக பதிவேட்டினை பராமரித்திருக்கவில்லை.

## 2.6 சட்டங்கள், விதிகள் மற்றும்பிரமாணங்களுடன் இணங்காமை

முகாமைத்துவத்துடன் தொடர்பான தலைமை செயலக அலுவலகத்தின் 2010 மே 14 இன் சீஏ/1/17/1 ஆம் இலக்க அரச செலவின சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தியின் பிரகாரம் கௌரவ அமைச்சர் மற்றும் பிரதம அமைச்சரிற்காக ஒதுக்கப்பட வேண்டிய அதிகூடிய வாகனங்களின் எண்ணிக்கை 3 ஆக இருந்தபோதிலும், கௌரவ அமைச்சரிற்கு 4 வாகனங்களும் கௌரவ அரச அமைச்சருக்காக 04 வாகனங்களும் ஒதுக்கப்பட்டிருந்தது.

## 2.7 பாராளுமன்றத்தால் வழங்கப்பட்ட முக்கிய செயற்பாடுகளைநிறைவேற்றுவதற்காக பயன்படுத்தப்பட்ட ஏற்பாடுகள்

(அ) விடயமொன்றிற்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 33.00 மில்லியன் மொத்த ஏற்பாடும் செலவழிக்கப்படாமல் சேமிக்கப்பட்டிருந்தது.

**(ஆ) ஏனைய அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் மாவட்ட செயலகங்களினால் வழங்கப்பட்ட ஏற்பாடுகளை பயன்படுத்தல்.**

மாகாண தேர்தலுக்கு பிரதிநிதித்துவம் செய்யப்பட்ட பெண் வேட்பாளரின் பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தின் துண்டுப் பிரசுரங்களை அச்சிடுவதற்காக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சால் ரூபா 7.1 மில்லியன் ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதில், ரூபா 1.44 மில்லியன் தொகை மீளாய்வாண்டின் போது பயன்படுத்திருந்ததால் வழங்கப்பட்ட ஏற்பாடுகளில் 79.58 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 5.65 தொகை சேமிக்கப்பட்டிருந்தது. அச்சிடல் நோக்கங்களிற்காக ரூபா 0.99 மில்லியன்தொகை ஏற்படுத்தப்பட்டிருந்ததுடன் பிரதேச செயலகங்களிற்கு அத்தகைய துண்டுப்பிரசுரங்களை அனுப்புவதற்காக ரூபா 0.45 மில்லியன் தபால் கட்டணங்களாக செலவழிக்கப்பட்டிருந்தது.

## 2.8 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

பொருளாதார முகாமைத்துவம் மீதான அமைச்சரவைக் குழு மற்றும் அமைச்சரவையின் பிரதியுடன் பாதீட்டு பணிப்பாளர் நாயகத்தால் வழங்கப்பட்ட 2017 சனவரி 26 இன் பீடீ/எச்ஆர்டீ/120/02/01 ஆம் இலக்க கடிதத்தில் 2017 ஆம் ஆண்டிலிருந்து மேலதிக ஏற்பாடுகள் வழங்கப்பட முடியாது என குறிப்பிடப்பட்ட போதிலும், அமைச்சரின் அலுவலக வதிவிடம் தொடர்பில் தளபாடம் மற்றும் உபகரணத்தை பெறுகை செய்யும் நோக்கல் 2016 ஆம் ஆண்டில் ரூபா 10.14 மில்லியன் குறைநிரப்பு ஏற்பாடுகள் வழங்கப்பட்டதுடன் அந்த ஏற்பாட்டில் ரூபா 3.7 மில்லியன் தொகை அமைச்சரின் அலுவலக வதிவிடத்தின் கைப்பிடி சுவரின் நிர்மாணத்திற்காக ஏற்படுத்தப்பட்டிருந்தது. ஆனால், பாதீட்டு பணிப்பாளர் நாயகத்திற்கு அமைச்சரின் செயலாளரால் முகவரியிடப்பட்டு திகதியில்லாமல் வழங்கப்பட்ட எம்டபிள்யூசீஏ/எஸ்/எஸ்/ஏடீ/ஏஎல்எல்/2017 கடிதத்ததால் மேற்கூறப்பட்ட செலவினமானது அலுவலக வதிவிடத்தின் சரக்கறை அலுமாரிகளை பொருத்துவதற்காக மேற்கூறப்பட்ட செலவினம் ஏற்படுத்தப்பட்டிருந்ததுஎன குறிப்பிடப்பட்டது. மிகுதி குறைநிரப்பு ஏற்பாடுகளின் பிரகாரம், மீளாய்வாண்டின் போது ரூபா 6.4 மில்லியன் தொகை ஏற்படுத்தப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின்போது கைப்பிடி அலுமாரிகளை பொருத்துவதற்காக ரூபா 2.828 மில்லியன் வேறொரு தொகை ஏற்படுத்தப்பட்டிருந்தது.

## 2.9 மனிதவள முகாமைத்துவம்

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட, உள்ளபடியான, வெற்றிடமான மற்றும் மிகைப் பதவியணி தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன. மீளாய்வாண்டிற்காக அமைச்சினால் ஆளணி வேதன செலவின தொகுதிக்காக ரூபா 604 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் நபரொருவருக்கான செலவினம் ரூபா 472,318 ஆக இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை | உள்ளபடியான எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 31 | 25 | 06 |
| (ii) | மூன்றாம் நிலை | 17 | 13 | 04 |
| (iii) | இரண்டாம் நிலை | 1,437 | 1,174 | 263 |
| (iv) | ஆரம்ப நிலை | 75 | 65 | 10 |
| (v) | அமைய ஒப்பந்த/ | 02 | 02 | - |
| | **மொத்தம்** | **1,562** | **1,279** | **283** |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பிரதேச செயலகங்களுக்கு இணைக்கப்பட்டிருந்த பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் ஆலோசனை உதவி உத்தியோகத்தர் பதவிகளில் 263 வெற்றிடங்கள் என குறிப்பிடப்பட்டிருந்தாலும் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு 1,174 உத்தியோகத்தர்கள் கடமையில் ஈடுபட்டிருந்தனர். அந்த உத்தியோகத்தரினால் மேற்கொள்ளும் கருமங்கள் தொடர்பாக முறையான தொடர் செயல் நடவடிக்கைகள் மற்றும் மேற்பார்வைகள் மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் அனுப்பியிருந்த முன்னேற்ற அறிக்கைகளிலும் போதியளவு விடயங்கள் காட்டப்படல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அமைச்சின் 06 சிரேஷ்ட நிலை உத்தியோகத்தர்கள் மற்றும் 04 மூன்றாம் நிலை உத்தியோகத்தர்களுக்கான வெற்றிடங்கள் காணப்பட்டள்ளமையால் பிரதேச செயலகங்களினால் மேற்கொள்ளப்படும் அமைச்சின் கருமங்கள் நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைத் திணைக்களம், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை, சிறுவர் அபிவிருத்தி நிதியம், சிறுவர் செயலகம், மகளிர் பணியகம், மகளிர் குழு அபிவிருத்தி பிரிவு ஆகியவற்றின் விவகாரங்கள் தொடர்பாக மேற்பார்வை விடயங்கள் உரிய முறையில் மேற்கொள்ள முடியாதிருந்தது.

(இ) பதவியணியின் இயலுமையை கட்டியெழுப்பல் 14 உத்தியோகத்தர்களிற்கு மாத்திரம் அவசியமாக இருந்த போதிலும், அதில் 1,279 உண்மையான பதவியணிக்கு 4 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் வழங்கப்பட்டிருந்தது.